செ.வெ.எண்: 39 நாள்:18.11.2019

## கரூர் மாவட்டம்

**ஆண்டாங்கோவில் கிழக்கு ஊராட்சியில் 50 பயனாளிகளுக்கு ரூ.9.25லட்சம் மதிப்பிலான விலையில்லா கறவை மாடுகளை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டம் தாந்தோன்றிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆண்டாங்கோவில் கிழக்கு ஊராட்சியில் 50 பயனாளிகளுக்கு ரூ.19.25 லட்சம் மதிப்பிலான விலையில்லா கறவை மாடுகளை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், இன்று (18.11.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோரின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்டத்தில் முதன்முறையாக ஏழை, எளிய கிராமப்புற பெண்களுக்கு விலையில்லா கறவை மாடுகள் இன்று வழங்கப்பட்டது. கிராமப் பொருளாதாரம் என்பது மிக முக்கியமானது. கிராமப்பொருளாதாரம் வலுவாக இருந்த காரணத்தால்தான், உலகப்பொருளாதார மந்தநிலை இருந்தபோதுகூட இந்தியா அதிலிருந்து தற்காத்துக்கொண்டது. 130கோடி மக்கள் தொகை உள்ள நாட்டில் வேளாண் தொழில் என்பது, வாழ்வாதாரத்திற்கான அடிப்படையான தொழிலாக இருக்கின்றது. அந்த வேளாண் தொழிலுக்கு உபதொழிலாக மாடு,ஆடு,கோழி வளர்ப்பு தொழில்கள் இருக்கின்றது.

பெண்களின் நலனுக்காகவும், அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் பெண் சிசுக்கொலைகளை தடுக்கும் விதமாக தொட்டில்குழந்தை திட்டம், மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம், கர்ப்பிணி பெண்களுக்கு மகப்பேறு நிதி உதவி திட்டம், விலையில்லா ஆடுகள் மற்றும் கறவை மாடுகள், மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டம், வளரிளம் பெண்களுக்கான சத்தான உணவுப்பொருட்கள் வழங்கும் திட்டம், இரண்டு பெண்குழந்தை பாதுகாப்பு நிதியுதவி திட்டம், என எண்ணிலடங்கா திட்டங்களை அறிவித்து செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து செயல்படுத்திய அனைத்து திட்டங்களையும், அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில், தமிழக அரசின் சிறப்புத்திட்டங்களுள் ஒன்றான ஏழை, எளிய கிராமப்புற பெண்களுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டம் இன்று கரூர் மாவட்டத்தில் சிறப்பாக தொடங்கப்பட்டுள்ளது. ஒரு பயனாளிக்கு ரூ.38,500 வீதம் மொத்தம் ரூ.19.25லட்சம் மதிப்பிலான கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளது. ஆண்டாங்கோவில் கிழக்கு ஊராட்சியில் மட்டும் கடந்த 2011 ஆம் ஆண்டில் இருந்து 520 பயனாளிகளுக்கு ரூ.86லட்சம் மதிப்பிலான விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது.

இன்று கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ள 50 பயனாளிகளும் மாடுகளின் மூலம் கறக்கப்படும் பாலினை வழங்கும் வகையிலும், அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலுமான மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் இன்று புதிதாக ஆண்டாங்கோவில் கிழக்குப் பகுதியில் துவங்கப்பட்டுள்ளது. இதுவரை திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தோடு இணைந்திருந்த நமது கரூர் மாவட்டத்தை பிரித்து, தற்போது கரூர் மாவட்டத்தை தலைமையிடமாகக்கொண்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தை உருவாக்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். தற்போது நமது கரூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் 65,000லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இனி வரும் காலங்களில் அதிக அளவிலான பால் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது முதலமைச்சர் அவர்களும் ஒரு விவசாயி என்பதால், தமிழகத்து விவசாயிகளின் நலன் கருதி குடிமராமத்து என்ற திட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாகவே செயல்படுத்தி, குடிமராமத்துநாயகனாக மக்கள் மனதில் இடம்பிடித்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். 1996ஆம் ஆண்டிற்கு பிறகு நமது கரூர் மாவட்டத்தில் உள்ள வாங்கல் வாய்க்கால், நெரூர் வாய்க்கால், பாப்புலர் முதலியார் வாய்க்கால், புகளூர் வாய்க்கால், கட்டளை மேட்டுவாய்க்கால், ராஜவாய்க்கால் உள்ளிட்ட அனைத்து வாய்க்கால்களும் தூர்வாரப்பட்டு கடைமடைவரை தண்ணீர் செல்லும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் பொற்கால ஆட்சியை வழங்கிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரும் நன்றி சொல்லக்கடமைபட்டிருக்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, கால்நடை பராமரிப்புத்துறை இணைஇயக்குநர் திரு.இராதாகிருஷ்ணன், ஆவின் பொதுமேலாளர் மரு.ஈஸ்வர், கரூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தலைவர் திரு.எம்.எஸ்.மணி, தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கி இணைய தலைவர் மற்றும் கரூர் நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.திருவிகா, மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தலைவர் திரு. பேங்க் நடராஜன், எல்.என்.எஸ்.வங்கித்தலைவர் திரு.சிவசாமி, மற்றும் கூட்டுறவு சங்கப்பிரதிநிதி திரு. திரு.என்.எஸ்.கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**